பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 14 ஞாயிற்றுக்கிழமை (29 11 1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 03

ராணுவத் தோல்வியே அரசை தீர்வுக்கு நிர்ப்பந்தித்துள்ளது!

அராலி நோக்கி ஷெல் தாக்கு சுழிபுரத்திலும் சேதங்கள்!

அராலி, நவ. 29

திவுப்பகுதியில் இருந்து ஸ்ரீலங்காப்படையினர் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் அராலிப் பகுதி குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். வீடு ஒன்று ஷெல் வீச்சினால் சேதமடைந்தது.

அடுத்துச் சந்திக்குச் சமீபமாகவும் ஒரு ஷெல் குண்டு விழுந்து வெடித்தது. மற்றும் பல ஷெல்கள் அராலி மத்தி உட்பட அநேக இடங்களில் விழுந்து வெடித்தன.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் சுழிபுரம் வடக்கு சிவன் கோவிலடிப் பகுதியை நோக்கிய இடங்களில் நான்கு ஷெல்கள் விழுந்து வெடித்தன. இதனால் உடைமைச் சேதங்களும் ஏற்பட்டன. ஷெல் தாக்குதல் அடுத்து மக்கள் அன்றிரவு அங்கிருந்த இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றனர்.

(29-12-28)

மாவீரர் நாள் கூட்டம் மீது சங்கானையில் ஹெலி தாக்கு!

இளம் பெண் காயமுற்றார்

வாழ்ப்பாணம், நவ. 29

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் சங்கானை சந்தை மைதானத்தில் மாவீரர் நாள் நிகழ்ச்சிகளுக்காக கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப்படை ஹெலிக் கொப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியது.

ஹெலியின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சங்கானைச் சந்தை பஸ் நிலையப் பகுதியில் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்த — சங்கானை - அராலி வீதியைச் சேர்ந்த — சற்குணம் புவனலோஜினி (வயது 18) என்ற இந்தப் பெண் உடனடியாக சங்கானை ஆயுர்வேதி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

ஹெலித் தாக்குதலை

(2 ஆம் பக்கம் பார்க்க)

"வோக்கி டோக்கி"யுடன் 2 தமிழர் கொழும்பில் கைது!

கொள்ளுப்பிட்டியில் மாலித் தியாலயம் ஒன்றுக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இரு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து இரண்டு "வோக்கி டோக்கி" கருவிகளை பொலிஸார் கைப்பற்றினர்.

இதேவேளை —

நுகேகொடையிலுள்ள வீடொன்றில் வேறு வஸ்துக்களைப் பதுக்கி வைத்திருந்த 3 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

(உ-ம்)

20 தீவிரவாதிகள் கைது!

கொலைப் பட்டியலில் 5 தமிழ் அரசியல்வாதிகள்?

கொழும்பு, நவ. 29

கொழும்பில் அண்மையில் 20 தீவிரவாதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கொலைப் பட்டியலில் கொழும்பிலுள்ள 5 தமிழ் அரசியல் வாதிகளின் பெயர்களும் அடங்கியிருந்தன.

கொழும்புத் தமிழ் தினசரி ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

கைதானவர்களில் இருவர் யுவதிகள் என்றும், அவர்களில் ஒருவரிடம் இருந்து மேற்படி பெயர்ப்பட்டியல் கைப்பற்றப்பட்டதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-ம்)

கொழும்பின் புதிய போக்குக் குறித்து அரசியல் ஆய்வாளர்கள் கருத்து

கொழும்பு, நவம்பர் 29

அரசாங்கத்துக்கு இராணுவத் தோல்வி ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக அது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளது. அதனாலேயே அது தீர்வில் நாட்டம் காட்டத் தொடங்கி இருக்கிறது.

இவ்வாறு அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் அவதானிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளதாக ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

சமஷ்டி என்றால் அசுத்த மான வார்த்தை என்று கருதி வந்த இக்கால அரசியல்வாதிகள் இப்போது அதனை ஒரு வார்க்கியமாவது இனப் பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டும் என்ற கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நிலைமை கட்டுக்கடங்காது போய்விட்டதால். ஏதாவது ஒரு தீர்வை அடுத்தவர்களின் சம்மதத்துடன் கொண்டு வந்துவிடவேண்டும் என்று அரசு முனைப்படுகிறது —

தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் தமக்கு விரும்புவதில்லை சிங்களப் பெரும்பான்மை இராணுவத்தினர் மத்தியில் அதிக ஆத

(6 ஆம் பக்கம் பார்க்க)

நீதியான தீர்வு ஏற்படுவதை வைத்து அரசியல் லாபம் தேடமாட்டோம்

வவுனியாவில் பிரேமதாசா

வவுனியா, நவ. 29

எல்லாக் கட்சிகளும் ஐக்கியப்பட்டு இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வை உருவாக்க வேண்டும். அவ்வாறு நல்ல தீர்வைக் கொண்டுவந்தால் அதனை வைத்து அரசாங்கம் அரசியல் லாபம் தேட முயற்சிக்காது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாச நேற்று வவுனியாவில் வைத்து இப்படித் தெரிவித்தார்.

வவுனியா சுமினி மகாவித்தியாலயத்தில் நேற்று இடம் பெற்ற வவுனியா மாவட்ட ஜ.தே.க. மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் அரசுக் கட்சி மற்றும் விடுதலை இயக்கங்களை மறந்துவிட்டு — கிழக்குப் பிரச்சினைக்கு ஏற்றாற்போன்ற கூடிய ஒரு தீர்வை முன்வைக்குமாறு ஜனாதிபதி பிரேமதாச சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி பிரேமதாச உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

அனைவரினதும் யோசனைகளையும் கவனத்திற்கு எடுத்துக்கொண்டு இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வைக் காண்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

இந்தமுக்கிய பிரச்சினைக்கு தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக் குழு முயற்சி செய்து வருகிறது.

தீர்வை கொண்டு வருவதற்கு பாடுபட்ட அத்தனை கட்சிகள் அனைத்துக்கும் சம மதிப்பும் உரியதாகவிருக்கும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஈழ அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையை நிறுத்தி வைக்குக!

ஐ.நா. தூதரகத்திடம் கோரிக்கை

பாழ்ப்பாணம், நவ. 29

தமிழகத்தில் இருந்து ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லண்டனில் தலைமைச் செயலகம் கொண்டு இயங்கும் "தமிழ் தகவல் நிலையம்" என்ற அமைப்பே அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. தூதர் திருமதி ஸடகோ ஒவ்தாவுக்கு தமிழ் தகவல் நிலையம் கிரிவான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை இனப் பிரச்சினைக்கு இறுதியான தீர்வு காணப்படும்வரை ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை ஐ.நா. தூதரகம் நிறுத்த வேண்டும் என்றும் — அந்தக் கடிதத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் ஒத்துழைப்பின்றி

பயனளிக்கும் கடல ரோந்தை ஸ்ரீலங்கா நடத்த முடியாது!

கொழும்பு, நவ. 29

இந்தியாவின் ஒத்துழைப்பின்றி பயனளிக்கக் கூடிய விதத்தில் கடற்ரோந்து நடவடிக்கையை ஸ்ரீலங்காக்கடற் படையால் மேற்கொள்ள முடியாது.

"டிரொக்ட் வைர்" சஞ்சிகை இப்படி கருத்து வெளியிட்டிருக்கிறது.

இம்மாதப் பிற்பகுதியில் வெளியான இந்த சஞ்சிகையில் "விடுதலைப் புலிகளின் உபாயங்கள்" என்ற கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

R. R. தர்மரத்தினம்

சட்டத்தரணி R. R. தர்மரத்தினம் (J. P. U. M) காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி V. R. இரத்தினம் ஆகியோரின் அன்புப் புதல்வரும் R. கிங்கரத்தினம், R. கோபாலரத்தினம், காலஞ்சென்ற R. விஜயரத்தினம், R. அழகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (29-11-92) இன்று மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் உடுப்பிட்டி தென்னிந்தியத் திருச்சபைச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
R. கோபாலரத்தினம்
சுண்டிக்குளி. (23421)

திருமதி அப்பாத்துரை சிவபாக்கியம்

கொக்குவிலைச் சேர்ந்த அப்பாத்துரை சிவபாக்கியம் (அம்மாகுட்டி) காலமானார். இவர் காலம்சென்ற அப்பாத்துரையின் அன்பு மனைவியும், காலம்சென்ற முருகேசு, முத்தம்மாவின் அன்பு மகளும், காலம்சென்ற சுப்பிரமணியம், நடராஜா (கார்த்திகேசு), பரமானந்தம் (பழனி), சந்திரசேகரம் (சந்திரபாலு). செல்லமுத்து. காலம்சென்ற மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு இன்று நண்பகல் 12 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(23428)

தகவல்:
நா. பாலகுமார்
(பெறாமகன்)

சின்னத்தம்பி சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை. 221/1, கனகசபை வீதியில் வசித்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்பவர் 28-11-92 நேற்றுக் காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கமலாதேவி (பிரான்ஸ்), புஷ்பராணி, சுசீலாதேவி, கதிர்காமநாதன் (பிரான்ஸ்), வசந்தாதேவி (ஜேர்மனி), கணேசநாதன், கியாமளாதேவி, நிமலினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-11-92) ஞாயிற்றுக்கிழமை அவரது வீட்டில் இடம்பெற்று மாலை 3 மணிக்குப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றாரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;
சி. கணேசநாதன்
(23420)

அன்ரனிராஜன் நிலாஜினி

நிலாஜினி காலமாகிவிட்டார். இவர் அன்ரனிராஜன், கலாவதி (வசந்தி) தம்பதிகளின் அன்பு மகளும், சிறில் பாக்கியலட்சுமியின் அன்பு பேத்தியும், திருக்குடும்ப கன்னியாஸ்திரி வித்தியாலயத்தின் ஆண்டு நான்கு (4) மாணவியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-11-1992) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வசந்தி (தாயார்)
3, முதலியார் ஒழுங்கை,
நல்லூர் தெற்கு. யாழ்ப்பாணம். (23425)

கந்தர் தம்பியப்பா

(திருநெல்வேலி)

மின்சார சபையின் ஓய்வுபெற்ற ஊழியர் கந்தர் தம்பியப்பா அவர்கள் 27 - 11 - 92 இல் காலமாகிவிட்டார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், செந்தில்நாதன் (ஓமான்), கமலவேனி, விமலதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும். சுப்புலட்சுமி, சுப்பிரமணியம் (இலங்கை மின்சார சபை - கொழும்பு), பாலசுந்தரம் (கனடா) ஆகியோரின் மாமனாரும் கௌசல்யா, அகல்யா, செந்தூரன், பகீரதன், றஞ்சினி (டென்மார்க்), சிவதாசன் (ஓமான்), சண்முகதாசன் (சுவிஸ்), கிருபாகரன், தயாவினி, ஹரிகரன், ஸ்கந்தகுமார் (கனடா), சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த. சிவபாக்கியம்
(மனைவி)
காளி கோவிலடி,
திருநெல்வேலி.
(23424)

இன்று

யாழ்ப்பாணம், நவ. 29

நாவண்ணனின் "கதை, கவிதை, கண்ணீர்" நூல் அறிமுக நிகழ்ச்சி ஒன்று இன்று பிற்பகல் 3.30 மணியளவில் சுன்னாகம், மயிலணி ஒழுங்கையில் இயங்கிவரும் குரும்பசிட்டி சன்மார்க்க சபை அலுவலகத்தில் இடம்பெறும்.

கலாசேகரி ஆ. தம்பித்துரை நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பர். (ஒ)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ் இந்துக் கல்லூரியழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி மைதான விரிவாக்கம் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 29

'பெண்களும் போசாக்கும்' என்னும் பொருளிலான கருத்தரங்கு ஒன்று மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் இன்று ஞாயிறு முற்பகல் 9 மணி முதல் மாலை வரை மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது. (உ-5)

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட ஆணையாளரும் அரசாங்க அதிபருமான திரு. கே. மாணிக்கவாசகர் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-5)

நாளை

யாழ்ப்பாணம், நவ. 29

திருமறைக் கலாமன்றம் நடத்தி வரும் இலக்கிய அவை கருத்தரங்குத் தொடரில் நாளை "ஈழத்து கத்தோலிக்க இலக்கியம்" என்ற தலைப்பில் செல்வி ந. விமலாம்பிகை. உரையாற்றுவார்.

நாளை மாலை 4.30 மணிக்கு யாழ் பிரதான வீதியில் உள்ள திருமறைக் கலாமன்ற கேட்போர் கூடத்தில் இந் நிகழ்ச்சி இடம்பெறும். (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 29

ஜி.சீ.ஈ (உயர்தர) வகுப்புகளுக்கு பௌதீகவியல் கற்பித்தல் சம்பந்தமான விரிவுரையும் கலந்துரையாடலும் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தூய விஞ்ஞானப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள இந் நிகழ்ச்சி யாழ் பல்கலைக் கழக இரசாயனவியல் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

டிறிபேக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. கே. பாலச்சந்திரன் இந் நிகழ்ச்சியில் விரிவுரை நிகழ்த்துவார்.

பாடசாலைகளில் பௌதீகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களின் கற்பித்தல் மேம்பாட்டிற்காக இந்த விரிவுரை ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக யாழ் விஞ்ஞான சங்கம் தெரிவித்துள்ளது (உ)

மாவீரர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து நிகழ்ச்சிக்காக வந்திருந்த மக்கள் நாலாபுறமும் கிதறி ஓடி பாதுகாப்புத் தேடிக் கொண்டனர். எனினும் தாக்குதல் நடத்திய ஹெலி சென்று மறைந்ததும் சில நிமிட நேரத்தில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிய நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றது. (உ-12-15-17)

உ

குருப்பட்டாபிஷேக அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ஆங்கீரச ஆண்டு கார்த்திகை மாதம் 15 ஆம் நாள் (30-11-92) திங்கட்கிழமை ஷஷ்டி திதியும், திருவோண நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 6-13 மணிமுதல் 7-00 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில்,

மீசாலை T. K. சுந்தரக்குருக்களின் பேரனும்,
K. S. பாலசுப்பிரமணியசர்மா அவர்களின்
ஏகபுத்திரனுமாகிய

சிரஞ்சீவி சுந்தரராஜகோபால சர்மாவுக்கு [முரளி]

குருப்பட்டம் வழங்கத் திருவருள் கூடியிருப்பதால் உறவினர்கள், அன்பர்கள் வருகைதந்து எம்மை மகிழ்வித்து ஏகுமாறு திரிகரணசுத்தியுடன் அழைக்கின்றோம்.

பிரதம குரு: தீக்ஷா குரு. கிரியா கலாமணி
சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள்;
சிவஸ்ரீ ஐ. ஞனக்குருக்கள் (நுணாவில்)
இடம்: வேரக்கேணி கந்தசுவாமி கோயில்
குரு இல்லம், மீசாலை.
(23423) T. K. S. பாலசுப்பிரமணிய சர்மா

நன்றி நவிலல்

21 - 11 - 1992 இல் மறைந்த எமது செல்வக் குழந்தை செல்வி சாகித்தியாவின் இறுதிக் கிரியைகளின் போது பங்கு பற்றிய,

— கம்பன் கழகத்துக் குடும்பத்தார்
— அறிஞர்கள். பெருமக்கள்
— பலாலி ஆசிரிய கலாசாலை சமூகத்தினர்
— யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமூகத்தினர்
— யாழ் றோட்டறிக் கழகக் குடும்பத்தினர்.
— புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்
— இன்ரறக்ட், றோட்டறக்ட் கழக உறுப்பினர்கள்
— நண்பர்கள், உற்றார், உறவினர்கள்
— அனுதாபச் செய்தி அனுப்பியோர் அனைவருக்கும்;

எமது மனமார்ந்த நன்றிகள்.

திரு. திருமதி தி. திருநந்தகுமார்.
இராணி மாளிகை,
கே. கே. எஸ். வீதி,
இணுவில்; (கி-3918)

கண்ணீர் அஞ்சலி

சிங்கநாயகம் ஜெயபாலசிங்கம்

ஜேர்மனியில் காலமாகிய அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

சிங்கநாயகம் ஜெயபாலசிங்கம் (வெள்ளைத்தம்பி) ஜேர்மனியில் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சிங்கநாயகம் (மாவிட்டபுரம்), மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும், குணபாலசிங்கம் (பிரான்ஸ்), மனோராணி, மனோரதி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், இராஜவதனி, சரவணபவான் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், விதூஷனி, வீரேஸ்வரன் ஆகியோரின் அருமைச் சித்தப்பாவும், சஹானாவின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சதாசிவம் அவர்களின் மருமகனும் பூபதி, நல்லம்மா, நாகேஸ்வரி (மணி) ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. பூபாலசிங்கம்,
இ. சண்முகலிங்கம்
(குகன்)
26, கனகசபை அவெனியூ,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(23426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெரினாலில் வந்த உரம்
காங்கேசனில் தேக்கம்!

யாழ்ப்பாணம், நவ 29 யு எஸ். எயிட்ஸ் விவசாய அபிவிருத்தித்துக்கென வழங்கும் உரம் காங்கேசன்துறையில் இருந்து "மெரினால்" கப்பலில் ஏற்றுமதிசெய்யப்பட்ட தாக தெரிவிக்கிறார்கள்.

நேற்றுமாலை செய்தியாளரை எடுத்துவரப்பட்ட 541 மெற்றிக் தொன் உரம், பலாலித் துறையில் கடுந்தடுத்த கப்பல் மூலம் நிரந்தரமாக இறக்க முடியாது காங்கேசன்துறையில் இறக்கப்பட்டுள்ளது.

அந்த உரத்தை காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் "மெரினால்" கப்பல் மூலமாக எடுத்துவர ஏற்பாடாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-3)

வத்தளையில் ஐந்து பேர் ஆயுதங்களுடன் கைது!

வத்தளையில் 5 தீவிரவாத சந்தேக நபர்கள் ஆயுதங்களுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கிரனைட், 2 பிஸ்டல்கள் ஆயுதங்கள் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டன.

இந்த ஐந்து பேரும் ஆயுதங்களை உபயோகிப்பதில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் என்றும்—இவர்கள் மன்னார், மட்டக்களப்பு, கல்லெடித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும்—

இவர்களின் தலைவன் அது வகை மாலத்துறையில் செயற்பட்டு வந்தாரவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பேச்சு மூலம் தீர்வு காணவே நான் விரும்புகின்றேன்

ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, நவ 29

யுத்தத்தை யுத்தத்தால் வென்று பரிகாரம் காண்பதை விட சுமுகமான பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும். இதையே நான் விரும்புகின்றேன்.

வறக்காப்பொலையில் நிறுவப்பட்ட ஆடை தயாரிப்பு தொழிற்சாலையை திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக நாட்டைக் கரும் மேகம் சூழ்ந்துள்ள படையினர் கொல்லப்படுகின்றனர். அப்பாவிப் பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர். உயிர்ச்சேதங்களையும், சொத்துக்கள் அழிவதையும் தடுக்க வேண்டும்.

எனவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியோடு இருக்கிறேன் என்றும் அவர் சொன்னார். (த)

முக்கிய புலி சந்தேக நபர் கைது செய்யப்பட்டாராம்

கொழும்பு, நவ. 29

கொழும்பில் புலிகளுக்கு ஆயுதம், பணம், தகவல்கள் வழங்கிய முக்கியநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

வெளிநாடுகளிலுள்ள தமிழர்களிடமிருந்து பணம் சேகரிப்பதிலும் புலிகளுக்கு ஆளணி சேர்த்தலிலும் இவர் ஈடுபட்டிருந்தாராம்.

புலிகளின் நடவடிக்கைகள் பற்றி வெளிநாடுகளுக்கு செய்திகள் அனுப்பி வந்த இந்த சந்தேகநபர் பெயர் சோமகந்தரம் (வயது 27) என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை பொறுப்பேற்க மறுப்பு

கொழும்பு, நவ. 29

முன்னாள் அமைச்சர் சிறில் மத்தியூவின் இல்லத்தில் நடமாடிக் கொண்டிருந்த குண்டு ஒன்று வெடித்து வைத்தியர் சிவமோகனின் சடலத்தைப் பொறுப்பேற்க அவரது பெரிய தகப்பனார் மறுத்து விட்டாராம்.

இப்படி கொழும்பு தமிழ்த் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

சிவமோகனின் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (இ-ஏ)

வைத்தியசாலைக்கு எரிபொருள் வந்தது

யாழ்ப்பாணம், நவ. 29

கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைக்குவந்து சேர்ந்த குமணன் கப்பலில் யாழ்.போதனா வைத்திய சாலையின் பாவனைக்கு தேவையான எரிபொருள்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

வைத்தியசாலை ஊழியர்களின் பாவனைக்கான மண்ணெய் 30 பரலும், வைத்தியர்களின் பாவனைக்கான பெற்றோல் 5 பரலும், வைத்தியசாலையின் பாவனைக்கான டீசல் 40 பரலும், ஒயில் 1 பரலும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ். வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. (த-15)

ராஜீவ் கொலையைப் போன்று
மனித வெடிகுண்டுப் பாணி இத்தாலி சினிமாவிலும்!

உடலில் வெடிகுண்டைக் கட்டிய நிலையில் ராஜீவ் காந்தியை கொலை செய்தது போன்ற காட்சி ஏற்கனவே இரண்டு ஹொலிவூட் படங்களில் இத்தாலி சினிமாப்படம் ஒன்றில் உள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறப்புப் புலனாய்வுத்துறை இயக்குநரான பொலீஸ் அதிகாரி டி ஆர். கார்த்திகேயன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டில் வெளியான "டெக்டா போர்ஸ்-3" என்ற இத்தாலி படத்தில் —

மாலையே கிரெக்ளிக் மாளிகையில் ஒரு வெளிநாட்டுத் தலைவருக்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது.

ஒரு பெண் தனது இடுப்பில் "பிளாஸ்டிக்" குண்டு ஒன்றை கட்டிக் கொண்டு, அதற்கு மேல் உடையணிந்து வருகிறாள். கையில் மலர் கொத்தும் இருக்கிறது.

சிறப்பு விருந்தினரிடம் அந்தப் பெண் மலர்க் கொத்தைக் கொடுக்கிறார். அதை வாங்கும் பொழுது அவரை அணைக்க முயற்சிக்கிறாள் அந்தப் பெண்.

அப்பொழுது இடுப்பில் கட்டியிருந்த வெடிகுண்டு வெடிக்கிறது. இருவரும் உடல் சிதறிப் பலியாகிறார்கள் —

பொது நிகழ்ச்சி ஒன்றில் உரை நிகழ்த்துகையிலேயே இவ்வாறு அந்தக் காட்சியை விவரித்தார் திரு. கார்த்திகேயன். (ஒ)

குடிதண்ணீர் பிரச்சினை தீர்ந்தது

தெல்மராட்சி, நவ. 29

பல வைத்தியசாலை நோயாளர்களின் குடி தண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு தமிழர் புனர் வாழ்வு கழகத்தினர் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் ஏற்படும் குடிதண்ணீர் பிரச்சினை குறித்து பச்சிலைப் பள்ளி நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் கிடுத்த வேண்டுகோளுக்கமைய இந் நீரிறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (த-117)

தசாக அறிவித்தல்

குமாரசுவாமிஐயர் இரத்தினசர்மா
(பாப்பா ஐயா)

காரைநகர்- வேலுமி இந்தி வித்தியாசாலை ஆசிரியரும் இலங்கையரசின் முன்னாள் தபாலதிபருமாகிய எமது தம்பியாரின் ஆத்ம சாந்தி நிமித்தம்;

30 — 11 — 92 திங்கள் தர்ப்பணம்
01 — 12 — 92 செவ்வாய் ஏகோதிட்டம், மாசியம்
02 — 12 — 92 புதன் சபிண்டீகரணம்
03 — 12 — 92 வியாழன் இருபத்தொரு

ஆகிய நிர்வேலியில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சாம்பசதாசிவக்குருக்கள்,
திருமதி கௌரியாம்பிகை,
திரு. கு. தியாகராசசர்மா குடும்பத்தினர்.

ஸ்ரீ அரசகேசரி நிலையர்-
வடக்கு வீதி,
நீர்வேலி.

(23415)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
பொன்னுத்துரை கனகம்மா
(வேலணை-3)

தோற்றம்: 19 — 05 — 1933
மறைவு: 26 — 11 — 1991

திதி: 29 — 11 — 1992

மண்ணை விட்டு நீங்கள் சென்று ஆண்டொன்று முடிந்ததோ
கண்ணில் உங்களை வைத்து பூஜிக்கும் நாங்களோ
மீண்டும் உங்கள் ஆத்மா சாந்தியென
நெஞ்சில் நாளும் இருத்தும் உங்கள் நினைவுகள்.

உங்கள் பிரிவால் வாடும்:
-குடும்பத்தினர்.

இல: 168, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(25418)

ஓ
சிவமயம்

திருமண அறிவிப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருடம் கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி (28 - 11 - 1992) சனிக்கிழமை உத்தராட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் பகல் 10-30 மணி முதல் 12-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

திருநிறை செல்வன்
இரத்தினகுமார்
அவர்களுக்கும்

திருநிறை செல்வி
கலாவதி
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு லண்டன் ஈஸ்ட்ஹாம் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது என்பதை உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

திரு. திருமதி வைரமுத்து (அத்தான்),
காவி கோவிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி தருமலிங்கம்,
686, நாவலர் றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(இ-3911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

மாழ்ப் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் ½ பரப்பு காணியுடன் கிணறு, மலசல கூட வசதியுள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். எஸ். கனகரட்ணம் 465/1, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (23414)

சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வியாபாரம் விருத்தியாகுமா? உடல் நோய், மனக்கலை எப்படி திருமா? கேட்டுப்பாருங்கள்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 884, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (23381)

இலவச திருமண சேவை

27 வயது, பூரட்டாதி, செவ்வாய் 4, ICMA கணக்காளராக கொழும்பில் கடமை புரிபவருக்கு ஏற்ற மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு காலை 9 மணி. து. விமலா இலவச திருமணசேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23403)

"ஏலோர் எம்பாவாய்"

தனிகளில் பனிச்சிடும் தூய வெண்மையது மிக்கவைற் சலவைத் தூள். கண்ணை கோப்பிக் கவர்களிலும் கிடைக்கிறது 10 மிக்கவைற் சலவைத்தூள் வெற்றுப்பக்கற் சேர்ப்பித்து "திருப்பள்ளி யெழுச்சி, நிருவெம்பாவை" சேர்ந்த நூலில் பிரதியொன்று அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள் (சி-3889)

கலண்டர்கள்

வியாபார சித்தரையா? விளம்பரம் பற்றிய யோசனையா? மூன்று வித்தான அழகிய ஒவ்செட் வண்டர்களை உங்கள் விளம்பரத்திற் கென்றே உருவாக்கப்பட்டுள்ளது. இன்றே எம்மை நாடுங்கள்: ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (23355)

தவறிவிட்டது

27 - 11 - 1992 அன்று கச்சேரிக்கும் - சந்தைமடம் பழைய றோட்டுக்கும் இடையில் கைச் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 35/6, குமாரசாமி வீதி, சந்தைமடம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (23417)

ஸ்ரீநிவாசன் வெளியேற்றம்

நாடாளுமன்ற உறுப்பினராக திரு. கே. ஸ்ரீநிவாசன் ஈ. எல். டி. எம். எவ். அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

இப்படி அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

திரு. ஸ்ரீநிவாசன் ஈ. எல். டி. எம். எவ். அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டார் என்றறிந்த அமைப்பின் அரசியல் செயலாளராக திரு. எம். கனகராஜன் கடிதம் மூலம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுத் தலைவர் மங்கள முனசிங்கவுக்கு அறிவித்திருக்கிறார்.

ஆண்டு 5 - 1993

(புலமைப் பரிசில் Aug 93)

மூன்றாவது பயிற்சிப் பரீட்சை; 29 - 11 - 1992

பயிற்சிப் பரீட்சைகான மாதிரி வினாத்தாள்களை 29-11-92 இற்கு நிருவாகங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

Bond — யாழ்ப்பாணம்
Selin — இருபாலை
Pearl — நீர்வேலி
Kugan — ஆவரங்கால்
Modern — நெல்லியடி
Satha Pons — அல்வாய்
Y.M.C.A. — பருத்தித்துறை
Brilliant — சாவகச்சேரி
Vinyls — சன்னாகம்
Paarathy — சித்தங்கேணி
Lukky — கட்டுடை
Bitsmans — மானிப்பாய்
Vinayahar — ஆனைக்கோட்டை
Keen — திருநெல்வேலி
Osslo — கச்சேரியடி

விவரங்களுக்கு:
Examination Unit,
BOND
யாழ்ப்பாணம்.
(சி-3910)

ஒய்வுதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், நவ. 19 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்தில் தற்போது சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (த-100)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

O/L - 93
ஆண்டு 10, 9

புதிய பிரிவுகள்

ஆரம்பம்:
05 - 12 - 92
(சனி 3-00மணி)

விஞ்ஞானம் — தயாநிதி
கணிதம் — கதிர்
சமூகக்கல்வி — இயூபேட்
தமிழ் — பிரதிபன்
வர்த்தகம் — ஸ்ரீ
ஆங்கிலம் — சண்

(சி-3811)

வர்ம சிகிச்சை (பயிற்சி நெறி)

[தமிழ் அக்குபங்சர்]

மேற்படி பயிற்சி நெறி 06 - 12 - 1992இல் ஆரம்பமாகின்றது. மனிதநேய அடிப்படையில் எம் மக்களுக்கு சேவை செய்யவிரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. எவ்விதமான மருத்துவங்களும் இன்றி நோய் தீர்க்கும் அற்புதமான வைத்தியமுறை. இப் பயிற்சி முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். (பிரதி ஞாயிறு தோறும்) க. பொ. த. (சா/த) சித்தி பெற்ற யாவரும் அவசர பஸ்தி பிரதேச விடுதலைப் புலிகளின் பொறுப்பாளரின் சிபார்சுக் கடிதத்துடன் வகுப்புக்களில் அனுமதி பெறலாம்.

அதிபர்,
சாயி மருத்துவக் கல்லூரி,
இல. 06, பருத்தித்துறை வீதி, (1ஆம் ஒழுங்கை),
யாழ்நகர்.
(சி-3780)

நன்றி நவில்கிறோம்

திருமதி வேலுப்பிள்ளை கதிராசிப்பிள்ளை

30 - 10 - 1992 அன்று கொழும்பில் சிவபதமடைந்த திருமதி வேலுப்பிள்ளை கதிராசிப்பிள்ளை (கண்ணகி வீதி, காங்கேசன்துறை) அவர்களின் மறைவுச் செய்தியை வானொலி மற்றும் தகவல்களின் மூலம் அறிந்த எமது இல்லத்திற்கு வருகை தந்து, ஆறுதல் கூறியும் பல வழிகளில் உதவியும் எமது துன்பத்தில் பங்கு கொண்ட உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமரர்தம் அந்திமேட்டிக் கிரியைகள் இன்று 29 - 11 - 1992 இல் கொழும்பில் நடைபெறும்.

அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப் போமாக!

தகவல்:
தாயார் — திருமதி மு. முத்துப்பிள்ளை,
சகோதரி — செல்வி சி. முத்தையா,
மைத்துனர் — திரு. திருமதி க. சின்னராசா,
பிள்ளைகள் — வே. செல்வன், வே. சிவயோகன்.

சுதந்தா பிளேஸ்,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சன்னாகம். (23405)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1988 இல் தயாரித்த தேர்தல் விஞ்ஞாபனத்தை சுதந்திரக்கட்சி கைவிட்டது!

1988 ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக்கட்சி தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை சுதந்திரக்கட்சி இப்போது கைவிட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவே இத்தகவலை கண்டியில் நடாளுமன்றத் தில் வெளியிட்டார்.

1988 ஜனாதிபதி தேர்தலில் அத்தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் சொல்லினார். (த-எ)

இராமநாதன் கல்லூரி நிறுவுநர் சேர். பொன் இராமநாதன் அவர்களின்

நினைவு நாளான 30-11-92 திங்கட்கிழமை காலை 7-00மணி தொடக்கம் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள இராமநாதேஸ்வர ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அத்தருணம் வருகை தந்து, இறைபதம் பெற்றேகுமாறு பெற்றோர், பழைய மாணவிகள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(இ/3909)

31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

செல்வன்
தயாபரன் சுப்பிரமணியம்
(திருநெல்வேலி யா/இ. த. க. பாடசாலை மாணவன்)

தாயின் மடியில்: 15 — 05 — 1984
ஆண்டவன் அடியில்: 30 — 10 — 1992

அன்னை தந்தையர்க்கு அன்புமிகு மைந்தன் நீ உடன் பிறந்தவர்க்கு ஆசைத் தம்பி நீ உற்றார். உறவினர்க்கு உயிரை தந்தவன் நீ காலதிவேட்டில் நீ பிரிந்து ஒரு திங்களானாலும் எம் நெஞ்சப் பதிவேட்டில் நீங்காத வாழும் அன்புச் செல்வமே தயாபரா!

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்;

அன்பு அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்கா,
உற்றார், உறவினர்கள்.

30 - 10 - 1992 அன்று எமது மைந்தனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலைவாணி மில் லேன்,
கொக்குவில் கிழக்கு. (23416)

உதயன்

சமஷ்டியும் தமிழர்களும் - 1

இலங்கை நாட்டின் அரசமைப்பை சமஷ்டி முறைக்கு மாற்றுவதற்குத் தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளான ஜக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணங்கி இருப்பதாக கடந்த வியாழக்கிழமை கொழும்பில் தகவல்கள் வெளியாகி இருந்தன.

ஆனால் இந்த மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு, இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணத்தைத் தனித்தனியாகப் பிரித்து விட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது! அதாவது தமிழர் தாயகத்தை இரண்டாகப் பிளந்தால் மட்டுமே சமஷ்டி அரசமைப்பை உருவாக்கலாம் என்று இரு கட்சிகளும் இணங்கினவாம்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சமஷ்டி அரசமைப்பு அடித்தளமாக வேண்டும் என்ற கருத்துடைய பலரும், ஐ. தே. க. — ஸ்ரீ. ல. சு. கட்சி இணக்கத்தை பெரிய அரசியல் மாற்றத்தின் ஆரம்பம் என்று கருதுகிறார்கள். அரசியல் ஆய்வாளர்கள், அவதானிகள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஆகியோர் நம்பிக்கைக்குரிய திருப்பமாகக் கருதுகிறார்கள்

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தமிழ் மக்களோ இரு கட்சிகளும் இணக்கத்துக்கு வந்ததைப் பெரிதாகஎடுக்கவில்லை. பிரமாதமாகக் கருதவில்லை.

தமிழர் தாயகத்தை பிளந்து கொண்டு சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வருவது என்பது குளத்தை மூடிவிட்டு நீரைத் தேக்கலாம் என்பது போலானது.

தமிழர்கள் சமஷ்டி கேட்ட காலம் ஒன்று உண்டு அப்போதும் கூட வடக்கும் கிழக்கும் சேர்ந்த தமிழர் தாயகத்தில் ஒரு மாநில சுயாட்சித் திட்டத்தை உறுதி செய்யக் கூடிய சமஷ்டியையே அவர்கள் கேட்டார்கள். முப்பந்தைந்து வருடங்களுக்கு முந்திய கோரிக்கைக்கு இப்போது சம்மதிப்பதாகத் கூறும் சிங்களக் கட்சிகள், அந்தக் கோரிக்கையின் மூல வேரை வெட்டிவிட்டு வெறும் தண்டினைத் தருவதாகச் சொல்கிறார்கள்!

இத்தனை வருடங்களின் பின்னர், இத்தனை இழப்புகள் அழிவுகளின் பின்னர், வேர் இல்லாத வெறும் தண்டினை வாங்குவதற்குத் தமிழர்கள் என்ன மடயர்கள் என்ற மெத்தனமோ இந்தச் சிங்களத் தலைவர்களுக்கு?

தமிழர் தாயகம் என்ற தமிழர்களின் உயிராள இலட்சியத்தை வெட்டிச் சாய்த்துவிட வேண்டும் என்ற வஞ்சகத்தனம் இன்னும் அவர்களை விட்டுப் போகவில்லை என்பதையே புதிய இணக்கம் எடுத்துக் காட்டுகிறது.

தமிழர்கள் சமஷ்டி கோரிய காலம் கடந்துவிட்டது; மலையேறிவிட்டது. அப்போது பஸ்ஸைத் தவறவிட்ட சிங்களத் தலைவர்கள் இப்போது அதனைப் பற்றிப் பேசுவது அர்த்தமற்றது.

தமிழர்களின் இன்றைய நிலைப்பாடு தன்னாட்சி, தனியரசு நிறுவுவதற்கான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதாகும். அதிலிருந்து ஒரு துளியும் இறங்கமுடியாது.

யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்டு அடக்கிவிடலாம் என்று நினைக்கும் சிங்களத் தலைவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தில்

28 ஆயிரம் விண்ணப்பங்கள் எழுதி பூர்த்தியாக்கப்பட்டன

மாவீரர் வாரத்தில் நடைபெற்றது

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ் பிறப்பு - இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் தேங்கிக் கிடந்த 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் திருமண அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் மாவீரர் வாரத்தின் போது எழுதி பூர்த்தியாக்கப்பட்டன.

மாவீரர் வாரத்தில் இடம் பெற்ற சிரமதான நிகழ்வின் ஓர் அங்கமாக இது இடம் பெற்றது.

யாழ். செயலகத்தின் பிரிவுகளில் கடமைபுரியும் எழுதுநர்கள், சிற்றூழியர்கள் ஆகியோரும் இதில் ஈடுபட்டனர்.

மேற்படி அலுவலகத்தில் தேங்கிக் கிடந்த இவ்விண்ணப்பப்படிவங்கள் கடந்த 25, 26ஆம் திகதிகளில் சிரமதான அடிப்படையில் எழுதிப் பூர்த்தியாக்கப்பட்டன.

[த-100]

மலேரியாவால் பாதிப்புறுவோர் எண்ணிக்கை பெருமளவு அதிகரிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள 6 சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவுகளில் அக்டோபர் மாதத்தில் மட்டும் 711 பேர் சாதாரண மலேரியாவாலும், 7 பேர் மூளை மலேரியாவாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட மலேரியா தடுப்பு இயக்கத்தினர் நடத்திய ஆய்வுகளில் இருந்து இது தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 674 பேர் சாதாரண மலேரியாவாலும், 13 பேர் மூளை மலேரியாவாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை —

மலேரியா நோய்க்கான மருந்து வகைகள் ஜனவரி நடுப்பகுதி வரையே கையிருப்பில் உள்ளதாகவும் —

மருந்து வகைகளை அனுப்பி வைக்கும்படி மூன்று மாதங்களுக்கு முன்னரே கொழும்பிலுள்ள மலேரியா தடுப்பு இயக்க அத்தியட்சகருக்கு அறிவிக்கப்பட்ட போதும், இதுவரை பயன் ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[த-162]

ராஜீவ் கொலை வழக்கு: சாட்சிகள் ஆயிரம் பேர்!

சென்னை, நவ. 29

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயிரத்து 14 சாட்சிகள் விசாரிக்கப்படவுள்ளனர்!

வழக்கு சம்பந்தமான விவரங்கள் ஆங்கிலத்தில் 12 ஆயிரம் பக்கங்களில் அடங்கியுள்ளன. தமிழில் ஏழு ஆயிரம் பக்கங்கள்.

சிறப்பு புலனாய்வுத் துறை இயக்குநரான டி. ஆர். கார்த்திகேயன் வெளியிட்ட இந்தத் தகவல்கள் சென்னைப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளன.

ராஜீவ் காந்தி கொலை வழக்குத்தான் உலகிலேயே மிகப் பெரிய வழக்காக இருக்கக் கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

[ஒ]

பிரபாவை அனுப்பும் கோரிக்கை இந்தியா பரிசீலனை செய்கிறதாம்

புதுடில்லி, நவ. 29

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று இலங்கை அரசை முறைப்படி கேட்டுக்கொள்வது பற்றி இந்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

புதுடில்லி லோக சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் வெளிவிவகார இணை அமைச்சர் எட்வர்டோ பெலரோ இத்தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பற்றி கடந்த அக்டோபர் மாதம் 31ஆம் திகதி பி. பி. கி. தொலைக்காட்சி சேவை ஒளிபரப்பிய விவரணச் சித்திரம் குறித்து லோக சபையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒளிபரப்பில் இந்திய இராணுவம் பற்றியும் முன்னாள் பிரதமர் ராஜீவ் பற்றியும் திரு. பிரபாகரன் கூறிய தவறான கருத்துகள் இடம் பெற்றிருந்ததாக காங்கிரஸ் எம். பிக்கள் குறை கூறினார்கள்.

செயற்கைக் கோள் மூலம் இந்தியாவில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்த மத்திய அரசு விதி முறைகளை வகுக்க வேண்டும் என்று காங்கிரஸ் எம். பி. திரு. நாராயணசாமி தெரிவித்தார்.

[இ-எ]

வட்டுக்கோட்டை வீதி திறப்பு

வட்டுக்கோட்டை, நவ. 29

வீரவேங்கை உதயன், சித்திரா, ஜெகன் ஆகியோர் நினைவாக வட்டுக்கோட்டையில் மூன்று வீதிகளுக்கு பெயர் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது.

[க-ரி]

அனைத்துக் கட்சி மாநாடு விரைவில் கூட்டப்படும்

கொழும்பு, நவ. 29

அனைத்து அரசியல் கட்சிகளின் மாநாடு விரைவில் கூட்டப்படவிருக்கின்றது.

இலங்கை அரசமைப்புக்கு கொண்டு வரப்படவுள்ள 17ஆவது திருத்தத்தின் நகலை விவாதிப்பதற்காகவே இம் மாநாடு மீண்டும் கூட்டப்படவிருப்பதாக அரசியல்வட்டாரங்கள் தெரிவித்தன.

அடிப்படை உரிமைகளைப் பேணுவதாக இச்சட்டத்திருத்தம் அமைகின்றது.

இந்த சட்டத்திருத்தம் 1991இல் முதன்முதலாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

திருத்தத்தில் இடம்பெற்ற சில விதிகளை சுதந்திரக் கட்சி எதிர்த்ததினால் அப்போது நாடாளுமன்றம் இத்திருத்தத்தை விவாதத்துக்கு எடுக்கவில்லை.

[த-எ]

கிளிநொச்சியில் வீதிகளை புனரமைக்கும் வேலைகள்

யாழ்ப்பாணம், நவ. 29

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள வீதிகளைத் திருத்தியமைக்கும் வேலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகின்றது.

ஜமால் வீதி, திருநகர் பிரதான வீதி ஆகியவை தற்போது திருத்தியமைக்கப்பட்டு வருவதாகவும் — திருத்த வேலைகள் முடிவுற்றதும் வாகனப் போக்குவரத்துக்கும், மக்களின் பாவனைக்கும் இவை ஏற்றதாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[த]

ஆயுள்வேத கல்லூரி மாணவருக்கான ஆங்கில வைத்திய விரிவுரை; நிறுத்தி வைக்க முடிவு!

கொழும்பு, நவ. 29

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்களுக்கான மேலைத்தேய ஆங்கில வைத்தியம் தொடர்பான விரிவுரைகளை நிறுத்தி வைப்பதென மருத்துவக் கவுன்ஸில் முடிவு செய்துள்ளது.

மேலைத்தேய வைத்தியக் கல்வியின் சில விரிவுரைகளுக்கு மட்டும் அனுமதிக்கப்படும் இம் மாணவர்களில் சிலர் வைத்தியர்களானதும் மேலைத்தேய வைத்தியம் பார்ப்பது தெரிவுவந்திருப்பதாகவும் —

இது பொதுமக்களுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு ஆயுள்வேத மாணவர்களின் பாடவிதானத்தை மாற்றியமைக்கும்படி கொழும்புப் பல்கலைக்கழகத்தை மருத்துவக் கவுன்ஸில் கோரியுள்ளது.

இதேவேளை — விரிவுரைகள் நிறுத்தப்பட்டதை கொழும்பு ஆயுள்வேத கல்லூரி மாணவர்கள் கண்டித்துள்ளனர்.

[த]

விடுதலையும், கல்வியும் தமிழினம் விடிவுகாண இன்றியமையாதவை

பரிசளிப்பு விழாவில் இளங்குமரன் உரை

சிறுவர்களின் ஆரம்பக்கல்வி விதிரமானதாக அமைந்தால் மட்டுமே எதிர்காலத்தில் கல்வித்துறையில் மாணவர்கள் மேம்பாடு காணமுடியும். தமிழீழ மண்மீட்புப் போரை நடத்துவது மட்டுமன்றிக் கல்வித் துறையை வளம்படுத்தும் நடவடிக்கைகளும் எம்மால் எடுக்கப்பட்டு வருகின்றன. விடுதலையும் கல்வியும் தமிழினத்தின் விடிவுக்கு இன்றியமையாதவை.

கோண்டாவில் கி. சி. த. க. [தெரிவுப்] பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் கல்விப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் இவ்வாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. இ. சிவபாதசேகரம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து பேசுகையில் அவர் தெரிவித்ததாவது:

நூற்றுப்பதினைந்து ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட இப் பாடசாலை எமது விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மாவீரர் எழுச்சி வாரத்தில் கல்வித் துறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த விழாவைக் கொண்டாடுவது பொருந்தமானது — என்றார்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பேசும்போது தெரிவித்ததாவது:

பின்தங்கிய ஏழைக் குழந்தைகள் தமது அடிப்படைக் கல்வியை நல்ல சூழலில் பெறக்கூடியதாக பெரிய சிறிய பாடசாலைகள் என்ற பேதமின்றி அனைத்துப் பாடசாலைகளுக்கும் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுக்கக் கல்வித் திணைக்களம் முன்வர வேண்டும் என்றார்.

தலைமை உரையில் அதிபர் திரு. சிவபாதசேகரம் கூறியதாவது:

1877இல் ஆரம்பிக்கப்படும் பல்வேறு திறமையாளர்களையும் உருவாக்கி நூறு ஆண்டுகளுக்கு மேல் வரலாற்றைக் கொண்டுள்ள இப்பாடசாலைக்கு தேவைகள் பல உண்டு. மிகப்புராதன நிலைக்குச் சென்றுவிட்ட இதற்குப் புதிய கட்டடம் அமைப்பதுடன் விளையாட்டு நிலம் என்பனவும் தேவை. இந்தத் தேவைகளை பூர்த்தி செய்ய அனைவரும் முன்வருதல் வேண்டும் என்றார்.

யாழ். பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. சு. வேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் ஆசிரியை செல்வி சுதாரஞ்சினி, திருவாளர்கள் கி. நடேசபிள்ளை, இ. சிவசுப்பிரமணியம் உட்படப் பலர் பேசினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

[த-111]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமர் கோயிலைக் கட்டுவதற்கு பாரதீய ஜனதா அரசு அனுமதிக்காது

உயர்நீதிமன்றுக்கு உத்தரவாதம்

அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தில் விஷ்ணு ஹரிஹர் இராமர் கோயிலைக் கட்டுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று உத்தரப் பிரதேச மாநில அரசு உயர் நீதிமன்றத்துக்கு உத்தரவாதம் அளித்திருக்கிறது.

உத்தரப்பிரதேசத்தில் ஆட்சியில் இருக்கும் பாரதிய ஜனதாக் கட்சி அரசின் இந்த முடிவு இந்திய அரசின் ஏற்படவிருந்த பெரும் பூகம்ப நிலையைத் தவிர்த்திருப்ப தாக அதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய பாபரி மசூதிக்கு அருகில் — இராமர் அவதரித்த இடம் என்று கருதப்படும் பகுதியில் — இராமர் கோயிலைக் கட்டுவதற்கு விஸ்வ ஹிந்துப் பரிஷத் முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

எதிர்வரும் 6ஆம் திகதி தமது "கரசேவை" தொண்டர்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு கோயில் கட்டுமானப் பணியை ஆரம்பிப்பர் என்று விஸ்வ ஹிந்துப் பரிஷத் அறிவித்திருந்தது.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஆட்சியில் இருக்கும் இந்த மிதவாதக் கட்சியான பாரதீய ஜனதாவும் விஸ்வ ஹிந்துப் பரிஷத்துக்கு முழு ஆதரவு வழங்கியதோடு, கோயிலைக் கட்டி முடிக்கும் நடவடிக்கையில் கிடாப்பிடி யாகவும் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றத் தீர்ப்பை மீறி கோயில் கட்டுமானப் பணி மேற்கொள்வதற்கு உத்தரப் பிரதேச மாநில அரசு அனுமதி வழித்தால், அந்த மாநில அரசைக் கலைப்பதைத் தவிர நரசிம்மராவ் அரசுக்கு வேறு வழியில்லை என்றும் —

அப்படி மாநில அரசைக் கலைப்பதால் இந்துத் தீவிர வாதிகள் பெரும் கலவரங்களில் இறங்குவார்கள் என்றும் எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால் இப்போது கோயில் கட்டுமானப் பணிக்கு அனுமதிக்கப் போவதில்லை என்று மாநில அரசு உத்தரவாதம் வழங்கியிருப்பது நிலைமையில் சூட்டைத் தணித்திருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

திருமலை - காங்கேசன்துறை கப்பல் சேவையும் ஆரம்பம்!

திருகோணமலைக்கும் - காங்கேசன்துறைக்கும் இடையில் கப்பல் சேவை ஒன்று நடைபெற உள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இக் கப்பல் சேவை வாரம் சார்த்தமாக கடந்த புதன் கிழமை ஆரம்பிக்கப்பட்டது என்றும், வாரத்தில் இரு தடவைகள் காங்கேசன்துறைக்கும் - திருகோணமலைக்கும் இடையில் இக் கப்பல் சேவையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கென புனர்வாழ்வு அமைச்சுக் கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி உள்ளதாக புனர்வாழ்வு ராஜாங்க அமைச்சின் செயலாளர் டாக்டர் ரஜா அமரசேர தெரிவித்தார்.

புதன்கிழமை நடைபெற்ற கப்பல் சேவையின்போது ஒவ்வொரு பிரயாணியிடமிருந்தும் தலா நூறு ரூபா கட்டணமாக அறவிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 23ஆம் திகதி திருகோணமலைக்கும் - காரைநகருக்கும் இடையில் இதே போன்று கப்பல் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே. (த)

இடமாற்றம்

ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம்

மேற்படி சோதிட நிலையம் இன்று (29-11-92) முதல்
158, ரெம்பிள் றோட், நல்லூர்
என்ற விலாசத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.
உங்கள் கஷ்டங்கள் எதுவானாலும் நீங்குவதற்கு சந்தேகத்துடன் நேரில் வரவும்.
அதிஷ்டம் அழைக்கிறது

(23427) ஸ்ரீ சக்தி கணேச உபாசகர்

புரட்சிகரமான தந்தையின் 12ஆம் ஆண்டு நினைவாக

தோற்றம்:	மறைவு:
05	29
—	—
06	11
—	—
1928	1980

அமரர் கந்தையா செல்லத்துரை

(தலைவர் அ. தொ. சே தொ ச. யாழ். கிளை)

தொழிலாளி வர்க்கத்தின் தொண்டன் ஆகி
தொழிற்சங்க உரிமைகாய் எங்கள் கண்ணீர்!
முழுநாளும் அவர் உரிமை முழக்கம் செய்து
முடிவினிலே எமைபெற்றோர் பிரிந்தீர் ஐயா!
எழிலாகப் புன்னகைக்கும் இனிய வதனம்
ஈரமற்ற ஆண்டவன் அழித்திட்டாலும்
அழியாத ஓவியம்போல் நிறைந்தே எங்கள்
அகமெல்லாம் ஒளியேற்ற வாழ்த்தி செய்தோம்!

என்றும் உங்கள்:
மனைவி, மக்கள், மருமக்கள்

யாழ்ப்பாணம். (23422)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 208 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-11-92 இல் அச்சிடப்பட்டு வெளியீடு செய்யப்பெற்றது.

ஈழ அகதிகளை ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரப்பட்டுள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதும், தென்பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் மீது செய்யப்படும் நடவடிக்கைகள் தொடர்வதும் திருப்பி அனுப்பப்படும் அகதிகளுக்கு பெரும் பாதிப்பையே ஏற்படுத்தும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

திருப்பி அனுப்பப்பட்ட அகதிகளில் ஒருசிலர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறித்தும் அந்தக் கடிதத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

திரும்பி வந்துள்ள பெரும் எண்ணிக்கையான அகதிகள் தமது இடங்களுக்குச் செல்ல முடியாமல் அகதி முகாம்களில் அடைத்து வைக்கப் பட்டுள்ளனர் என்பதும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (ஒ)

பயனளிக்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளதாவது:-

ஆனையிறவின் கிழக்கு முனையும் பூநகரியின் மேற்கு முனையும் ஆயுதப் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக ஸ்ரீலங்கா கடற்படையினர் கூறிவருகின்றனர். ஆனால் இந்த இரண்டு முனைகளுக்கும் இடையிலான பருத்தித் துறைப் புலிகள் இன்னும் பயன்படுத்தி வருகின்றனர்.

மன்னார் குடா மூலமாக தமிழ்நாட்டுக்குச் செல்ல உதவும் இப்பாதை நீண்ட தாக இருப்பினும் பாதுகாப் பானதாகும்.

விடுதலைப் புலிகளின் 'கோடை...'யான இப்பு திய கடற்படையினர் தமது கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரத் தவறிய இருப்பது ஆழங்குறைந்த நீர்ப்பகுதி களும் கடற்தாவரங்களுமேயாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வரும் பாதையாக கிளிநொச்சி — மாங்குளம் வழி உள்ளது. தீவின் நீண்ட கிழக்குக் கரையோரத்தில் மீது தீவிரக் கண்காணிப்பை மேற்கொள்ளக் கூடிய கப்பல்களும் பலமும் இலங்கைக் கடற்படையிடம் இல்லாதது.

இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றி பலவீனமடைந்த நிலையில் கடல் ரோந்தை இலங்கை கடற்படையால் மேற்கொள்ள முடியாது.

எதிரியுடன் உண்மையான யுத்தம் ஒன்றை நடத்தாத நிலையிலேயே ஆயுதப்படையி னரால் [illegible] வருகிறார்கள்" என்று தெரி வித்தது. (ஒ-11)

அக். 26 முதல் நவ. 25 வரையான ஒரு மாத காலத்தில் மட்டும் 119 படையினர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 29

கடந்த அக்டோபர் 26 ஆம் திகதி முதல் நவம்பர் 25 ஆம் திகதி வரையான — ஒரு மாத காலப் பகுதியில் — விடுதலைப் புலிகள் நடத்திய பல தாக்குதல்களில் 119 ஸ்ரீலங்காப் படையினர் கொல்லப் பட்டுள்ளனர். 119 இற்கும் மேற்பட்ட ஆயுதங்களை இராணுவத்தினரிடம் இருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் 89 புலி வீரர்களும் வீரமரண மடைந்தனர்.

கடந்த 8 ஆம் திகதி கிழக்கு

வட்டு. இந்து நாளை முதல் இயங்கும்

வட்டு. இந்துக் கல்லூரி நாளை திங்கட்கிழமை முதல் வழமைபோல் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது

கடந்த வாரத்தில் சுழிபுரத்தில் இருந்த இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலையில் தங்கியிருந்ததால், அது இயங்க முடியாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது (ஒ-12)

நீதியான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் அரசியல் யாப்பு சகல பிரசைகளுக்கும் சமமான உரிமைகளை வழங்கு கிறது. மக்களை தொகையின் எண்ணிக்கை, சாதி, மதம் அல்லது தனது அடிப்படை யில் சம உரிமை ஒருபோதும் மாறுபடப் போவதில்லை.

அதிபரான அரசியல் சாசனத்தை அமைவதற்காக சில சந்தர்ப்ப இந்த அடிப்படை உரிமைகளுக்கு பல்வேறு விளக்கங்களைக் கொடுத்தன; கொடுக்கின்றன இன்னும் சில பிரிவினருக்கு பல அநீதிகள் இழைக்கப்பட்டன. அந்த அநீதிகளை ஒழித்துக் கட்டுவதுதான் அரசின் குறிக் கோள்.

சனநாயகப் பாதையைப் பிடிக்காத இன்றைய அரசு, சனநாயக அமைப் பில் தற்போதைய பிரச்சினைக்கு தீர்வுகளை முன்வைத்து வருகிறது — என்று ஜனாதிபதி தெரிவித் தார்.

வடக்கிலும், கிழக்கிலும் சமாதானத்தை ஏற்படுத்துவ தற்காகவே, விடுதலைப் புலி களுடன் நாம் பேச்சுவார்த் தைகளை நடத்தினோம் — என்று சொன்னார்.

இந்த மாநாட்டில் அமைச் சர் வீரசிங்க மல்லிமாராச்சி உட்பட மற்றும் பலரும் உரை யாற்றினர். (ஒ)

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

ராணுவத்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கில் இழப்பு ஏற்படும்போதே அவர்கள் கவலைப்படுவ துண்டு — என்றும் ஆய்வாளர் கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இராணுவத்திலிருந்து ஆயிரக் கணக்கில் படையினர் ஓடம் பிடிக்கின்றனர் —

பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த உயரதிகாரிகள் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர் —

நாளாந்தம் இராணுவத் தினரின் உயிர்ப்பலி அதிகரித்து வருகிறது — ஆயிரக்கணக்கானோர் அரசாங்கத்துக்கு இராணுவத் தோல்வி ஏற்பட்டு வருகிறது.

இதனை அரசாங்கத்தில் உள்ளவர்களே சிறிதளவேனும் இப்போது உணரத்தொடங்கு கின்றனர். அது மட்டுமன்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று சர்வ தேசரீதியாக அழுத்தங்களும் வரத் தொடங்கியுள்ளன.

வெளிநாட்டு முதலீடுகளை உட்கொணர்ந்து பொருளாதாரத்தைச் சீராக்குவதற்கு அரச போடும் திட்டங்கள் நினைத்த வேற முடியவில்லை. யுத்தம் வடக்கு — கிழக்கில் எங்கோ ஒரு மூலையில் நடப்பதாகக் கூறி வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஏமாற்ற முடியாத நிலையும் உருவாகியுள்ளது.

இவ்வாறு பலபக்கங்களிலும் உண்டாகும் நெருக்கடிகளையும், தாக்குதல்களையும் தாங்க முடியுமா என்ற தன்னம்பிக்கையின்மை அரச வட்டாரங்களில் நிலவுகிறது. அதனாலேயே அரசாங்கம் இந்த முறை உண்மையாகவே தீர்வைத் தேடும் ஒரு கட்டாய நிலை தோன்றவுள்ளது — இவ்வாறு அரசியல் ஆய்வாளர்களும் தெரிவித்திருப்பதாக ஏஜென்சி செய்திகள் தமது எண்ணோட்டங்களில் தெரிவித்தன. (அ)

காடழிப்புக்கு பிரியாவிடை கொடுத்து காடு வளர்ப்புக்கு வரவேற்பு கொடுப்போம்

மரண அறிவித்தல்

ஷீலா ஆசீர்வாதம்

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. J.G. ஆசீர்வாதம் அவர்களின் மனைவி திருமதி ஷீலா பிராங்கிஸ் ஆசீர்வாதம் சென்ற புதன்கிழமை (25 ஆம் திகதி) மறைந்துவிட்டார். அன்னாரின் இறுதி ஆராதனை 75/2, வார்ப் பிளேஸ், கொழும்பு - 7 இல் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் சென்ற வெள்ளிக் கிழமை (27 ஆம் திகதி) நடைபெற்றது.

தகவல்:
எஸ். ஜெபநேசன்

வட்டுக்கோட்டை. (23419)

மேலும் மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org